**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.960/2022**
**வழக்கு சாட்சி P.W.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தங்கவேல் | தொழில் | : விவசாயம் மற்றும் தனியார் வியாபாரம் |
| தகப்பனார் பெயர் | : கந்தசாமிகவுண்டர் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : ஒட்டன்சத்திரம் | வயது | : சுமார் 67 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 07.07.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**2, 5, 6, 8 பிரதிவாதிகள் தரப்பில் மேற்கொள்ளப்படும் தொடர்ச்சியான குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை 4வது பத்தியில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்த பத்திரம் என்று சொல்லியுள்ளேன் என்றால் ? ஆமாம், சொல்லப்பட்டுள்ளது. அவ்வாறு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தம் என்று சொல்லியுள்ள நிலையில் ஒப்பந்த பத்திரம் பதிவு செய்யப்படாத ஒப்பந்த பத்திரத்தை தான் நான் வா.சா.ஆ.1 ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? சரிதான். வழக்கிற்காக வேண்டி வழக்குரையில் தவறான சங்கதியை தெரியப்படுத்தியுள்ளேன் என்றால் ? இல்லை. ஒப்பந்த பத்திரம் பதிவு செய்யப்படவில்லை. தவறுதலாக வழக்குரை சங்கதியில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தம் என்று சொல்லப்பட்டுள்ளது. நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் ? விவசாயம் மற்றும் பழைய ஆட்டோமொபைல் மிஷின் விற்கும் சென்னையில் வியாபாரம் செய்து வருகிறேன். நான் சொல்வது தவறு என்றாலும், கந்துவட்டிக்கு பணம் கொடுக்கும் தொழில் செய்து வருகிறேன் என்றாலும் ? சரியல்ல. என்னிடம் கடன் வாங்கும் நபர்களிடம் நான் வெற்று பத்திரத்தில் கையெழுத்து வாங்கும் பழக்கம் உள்ளது என்றால் ? சரியல்ல. 1–ம்

பிரதிவாதி எனக்கு எப்படி பழக்கம் என்றால் ? வடகாடு கிராமத்தில் 1வது எதிர்மனுதாரர் எலுமிச்சை தோட்டம் ஒப்பந்தத்திற்கு போட்டு இருந்தார். அப்போது கமிஷன் மண்டிக்கு வந்த வகையில் எனக்கு பழக்கம். நான் கமிஷன் மண்டி வைத்திருந்தேனா என்றால் ? இல்லை. நான் காய்கறிகள் கமிஷன் மண்டிக்கு கொண்டு வருவேன். 1–ம் பிரதிவாதி என்னிடம் கடன் வாங்க வந்த போது நான் வெற்று பத்திரத்தில் கையெழுத்து வாங்கி கொண்டேன் என்றாலும், அதன் அடிப்படையில் ஒப்பந்த பத்திரம் தயார் செய்து கொண்டேன் என்றாலும் ? சரியல்ல. 1–ம் பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கிய போது கடந்த 24.06.1999ம் தேதியிட்ட 1–ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்திற்குண்டான மூலபத்திரத்தை நான் வைத்துவிட்டேன் என்றால் ? சரியல்ல. ஒப்பந்தம் போடும்போது வாங்கி வைத்தேன். நான் தற்போது சென்னையில் வசித்து வருகிறேன் என்றால் ? இங்கேயும் இருப்பேன், சென்னையிலும் இருப்பேன். அவ்வப்போது சென்னை சென்று வருவேன். நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண பத்திரிக்கையை முழுமையாக படித்து பார்த்து கையொப்பம் செய்தேனா என்றால் ? ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண பத்திரிக்கையில் 13.08.2013ம் தேதி கிரைய ஒப்பந்தத்திற்கு விரோதமாக வழக்கு நடவடிக்கைகள் நிலுவையில் இருக்கும் போது 7ம் பிரதிவாதிக்கு 5, 6 பிரதிவாதிகள் செய்து கொடுத்த கிரயை பத்திரம் செல்லத்தக்கது அல்ல என்றுசொல்லியுள்ளேன் என்றால் ? சரியல்ல. 7ம் பிரதிவாதி 28.10.2010ம் தேதியில் 8–ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்துள்ள கிரைய பத்திரம் செல்லாது என்று முன்னுக்கு பின் முரணாக சொல்லியுள்ளேன் என்றால் ? சரியல்ல. ஒப்பந்தம் போட்ட போதே தொகை ரூ.4,50,000 தொகையினை முன்பணமாக கொடுத்துவிட்டேன் என்றால் ? சரிதான். பாக்கி ரூ.30,000 தொகைக்கு ஒரு வருடன் காலக்கெடு நிர்ணயித்து ஒப்பந்தம் போட்டேன் என்றால் ? சரிதான். அந்த காலக்கெடுவானது 13.08.2004ம் தேதியோடு காலக்கெடு முடிந்துவிட்டது என்றால் ? சரியல்ல. ஒப்பந்தத்தில்

கண்டுள்ள காலக்கெடு முடிவடைந்த பிறகு 2 ஆண்டுகளுக்குள் ஒப்பந்தம் பற்றி பேசிக் கொண்டு இருந்ததால் உரிய நேரத்தில் பேசி முடிக்கவில்லை. அதனால் வழக்கு தாக்கல் செய்தேன். ஒப்பந்த பத்திரத்தில் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடு முடிவடைவதற்கு முன்பாக பிரதிவாதிகளுக்கு நான் எழுத்துபூர்வமாக அறிவிப்பு ஏதும் கொடுக்கவில்லை என்றால் ? எழுத்துபூர்வமாக அறிவிப்பு கொடுக்கவில்லை. ஆனால் நேரில் பலமுறை கேட்டேன். ஒப்பந்தத்தில்ர கண்ட காலக்கெடு முடிந்து 2 ஆண்டுகள் கழித்து தான் வழக்குரைஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் ? ஆமாம். நான் வழக்குரைஞர் அறிவிப்பு அனுப்பும் காலம் வரையிலும் பாக்கி ஒப்பந்த தொகை ரூ.30,000 எனது கைவசம் தயாராக வைத்திருந்தேன் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் ? பணத்தை கையில் வைத்திருந்தேன். நான் வேறு மூன்றாம் நபர்களுக்கு வெளியில் பணம் கொடுத்து வரவு செலவு செய்துள்ளேனா என்றால் ? ஆமாம், கொடுத்துள்ளேன். அது சம்மந்தமாக வேறு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ? ஆமாம். அம்பத்தூர் நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது. பழனி நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது. கிரைய ஒப்பந்த காலம் முடிந்து 2 ஆண்டுகள் கழித்து தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ? ஆமாம். பணம் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு நீதிமன்றத்தின் மூலம் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ? சரியல்ல. பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்த ஆவணம் என்பது போலியாக தயார் செய்யப்பட்ட ஒப்பந்த ஆவணம் என்றால் ? சரியல்ல. வா.சா.ஆ–1 கிரைய ஆவணத்தின் படி எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் ? சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.07.07 17:37:46 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்